## பத்தாம் வகுப்பு * தமிழ் * விரிவானம் * இயல் 5

# புதிய நம்பிக்கை

## முன்னுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

கல்வியறிவற்ற இருட்சமூகத்தில் ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றியவர் மேரி மெக்லியோட் பெத்யூன். இக்கறுப்பினப் பெண்மணியின் வாழ்க்கையை உனக்குப் படிக்கத் தெரியாது என்ற தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் கமலாலயன் என்ற குணசேகரன்.

## உனக்குப் படிக்கத் தெரியாது

வெள்ளை முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்தன கறுப்பினக் குடும்பங்கள். சாம்-பாட்சி இணையரின் கறுப்பு தேவதை மேரி ஜென். பருத்திக்காடே கதி அவர்களுக்கு. துவைத்த துணிகளை பென் வின்சன் வீட்டுக்கு ஒரு நாள் எடுத்துச் சென்றனர் தாயும் மகளும். பாட்சி உள்ளே சென்றுவிட மேரி, வின்சனின் இரு மகள்களுடன் விளையாடத் தொடங்கினாள். அப்போது அங்கிருந்த புத்தகம் ஒன்றை மேரி எடுத்துப் புரட்டினாள். புத்தகத்தை என்னிடம் கொடு, நீ இதைப் படிக்க முடியாது என்றாள் வின்சனின் இளையமகள். நட்புணர்வு அற்ற அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் மேரி.

## வேண்டுதல் பலித்தது

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

அன்பு நிறைந்த கடவுளே என்னை இந்த வயல்களில் இருந்து வெளியே அழைத்துக்கொண்டு போ. நான் பள்ளி சென்று வாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று உருகினாள் மேரி. மிஸ் வில்சன் மூலமாக மேயெஸ்வில் சென்று படிக்க வாய்ப்பு வந்தது. மகிழ்ச்சியுடன் துள்ளியபடி 5 கிலோமீட்டர் நடந்து சென்று படிக்கச் சென்றாள் மேரி. கறுப்பு சிலேட், வெள்ளை உள்ளம், ஆம் ! புதிய நம்பிக்கை பிறந்துவிட்டது. இனி வீட்டில் திறக்கப்படாது இருக்கும் பைபிளை வாசித்துக் காட்டுவேன் என்றாள். ஆண்டுகள் ஓடின. இந்தப் பட்டம் பெறும் மாணவர்கள் எழுதவும் படிக்கவும் கூடியவர்கள் என்று எழுதப்பட்டிருந்த டிப்ளமோ பெற்றாள் மேரி. கல்லூரிக்குச் செல்லவும் விரும்பினாள்.

## முடிவுரை

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

மேல் படிப்பிற்காக நகரத்திற்குச் செல்லும் வாய்ப்பை மிஸ் வில்சன் பெற்றுத்தந்தார். கறுப்பின மக்களின் விடிவெள்ளியானார் மேரி. அவளை வழியனுப்ப ஊரே திரண்டது. வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள். சிலர் பாதைகளை உருவாக்கி நெடுஞ்சாலைக்கு அடித்தளமாக இருக்கிறார்கள். கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தின் குரல் மேரி மூலம் இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM